புள்ளிவிவரத்தையும் எங்கேயும் கூறாமல் இருக்கவே முடியாது. எந்த அரசாங்கமாக இருந்தாலும், ஒவ்வொரு demand புத்தகத்திலும், கடைசி ரூபாய் வரைக்கும், எல்லா demand புத்தகத்திலும், எல்லா துறைக்கும் இடம்பெற்றிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட அனுபவம் பெற்றவர். எந்தெந்தத் துறைக்கு அவருக்கு demand புத்தகம் வரவில்லையென்று சொன்னால், அனைத்து demand–ம் tab–லேயே இருக்கிறது. ஒருவேளை இல்லையென்றால், அவருடைய அச்சத்தைப் போக்கும் வகையில், நான் personal ஆக அவருக்கு புத்தகம் அச்சிட்டுத் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–03–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 29–3–2022 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.வ.வி/7–47–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 10–2–2021 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/TR/5/2–13 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. (i) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான

2023 மார்ச் 27]

விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து *5–9–2022* ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/மிக/*5–4* இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், *2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத் திட்டத்தின்படி மின் செலுத்துதல்/மின் பகிர்மானத்திற்கான மின் கட்டண வீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து *5–9–2022* ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/பஆமி (MYT)/*18–4* இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2003* ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *36/2003*) *182* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

54. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிக்காலங்களுக்காக வட்டித் தொகையை குறிப்பிடப்பட்டுள்ள இணைய வழியில் மின்னணு வணிகம் மேற்கொள்ளும் பதிவுபெற்ற நபர்களின் வகையினருக்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B*1*) துறையின் *8–6–2022* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *97* இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017* ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *19/2017*) *166* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

55. *2019–2020* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் பதினோராவது ஆண்டறிக்கை. [*2013* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *18/2013*) *395*(*1*) (b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

— ஏதுமில்லை —

*****